



அளவ... ... ... ... ...

வரைவாளர் நிலை -III

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Kanniyakumari
Date:2025.07.19 19:17:48

மேற்பார்வையாளர்

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கன்னியாகுமரி மாவட்டம்.

### மேலசங்கரன்குழி ஊராட்சி

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், நாகர்கோவில் உள்ளூர் திட்டப்பகுதி, இராஜக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மேலசங்கரன்குழி ஊராட்சி, நீண்டகரை "அ" மேற்கு கிராமம், சர்வே எண்: **108/1B** -இல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அமைப்பு ஒப்புதல் வரைபடம்.

(திட்டப் பகுதி)

இணையதள விண்ணப்ப எண் : XXYNG0V0/2025/TCP

அளவு ▪ 1:400

வ

குறிப்பு:

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | = 2166.00 ச.மீ (0.535 ஏக்கர்) |
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | = |
| நிலையிலுள்ள சாலை / அணுகுசாலை | = |
| கோரிய மனைகளின் எண்ணிக்கை | = 12 எண்ணம் |
| ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை | = 12 எண்ணம் |

பொது ஒதுக்கீடு (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள பகுதிகள்)

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு | = 2166.00 ச.மீ |
| உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்குகளின் பரப்பளவு | = 510.00 ச.மீ |
| மீதமுள்ள இடத்தின் மொத்த பரப்பளவு | = 1656.00 ச.மீ |

அரசாணை எண்: 18 ந.நி(ம)கு.வ(ந.நி.1)துறை நாள்:04.02.2019, விதி-47(6)-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019-பிஏ-2, நாள்:05.02.2020 CASE-IV -ன்படி பூங்கா 89.00 ச.மீ ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி மனுதாரரால் உரிய தொகை ரூ.60,520.00/- நாள்: 08.07.2025 அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம் (TNCD & BR - 2019, விதி-47(8)-ன்படி தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள 1% ஒதுக்கீடு)

A. உள்ளாட்சி உபயோகத்திற்கு = 18.00 ச.மீ. (1.08%)

B. தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக உபயோகத்திற்கு = 17.61 ச.மீ. (1.06%) (TANGEDCO)

தானப்பத்திரம் எண்கள்:2766/2025 , 2768/2025 (இராஜக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம்) நாள்: 01.07.2025

மூலை முடக்கு:

12.00மீ. வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்.

நிபந்தனைகள் :

1. அரசாணை எண: 18 ந.நி.(ம)கு.வ.(ந.நி.1)துறை நாள்:04.02.2019, அரசாணை எண்:16 ந.நி.(ம)கு.வ (ந.நி.1) நாள்:31.01.2020-ன்படியும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019பிஏ2, நாள்.05.02.2020 மற்றும் அரசாணை எண்: 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:09.12.2020-ன்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள், மூலைமுடக்குகள், பொது உபயோகத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உபயோக ஒதுக்கீட்டினை மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் அரசாணைகளின்படி உத்தேச சாலைகளை நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் தார்ச்சாலையாகவும் தேவையான அடிப்படை வசதிகளை இடத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்ட பின் அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.

2. இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கும் முன், இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. இம்மனைப்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதலானது எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை, அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6. The Tamil nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority.

7. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.

குறிப்பு

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது

**SWP/ம.வ/நா.உ.தி.கு.எண்: 33/2025**

**திட்ட அனுமதி எண்: 44/2025**

உறுப்பினர் செயலர்/ உதவி இயக்குநர்
நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமம் / மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்